செ.வெ.எண்: 227 நாள்:05.04.2018

திருநெல்வேலியில் ரூ.3.84 கோடி மதிப்பிட்டிலான ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சியின் மூலம் சென்னை தலைமை செயலகத்திலிருந்து திறந்து வைத்தார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி அலுவலக பணிகளை தொடங்கி வைத்தார்.

-----

திருநெல்வேலி, பாளையங்கோட்டை மகிழ்ச்சி நகர், திருமால் நகர் பகுதியில் ரூ.3.84 கோடி மதிப்பிட்டில் தொழிலாளர் துறையின் மூலம் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகம் கட்டப்பட்டுள்ளது. இவ்வளாகத்தினை இன்று (05.04.2018) காணொளி காட்சியின் மூலம் சென்னை தலைமை செயலகத்திலிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். திருநெல்வேலி தொழிலாளர் துறை அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி அலுவலக பணிகளை தொடங்கி வைத்தார். மேலும் அலுவலக வளாகத்தில் மரக்கன்று நடவு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 2 லட்சம் தொழிலாளர்கள் உள்ளனர். அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் சிரமங்களை போக்கும் வகையில் ரூ.3.84 கோடி மதிப்பிட்டில் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகம் கட்டப்பட்டுள்ளது. இதில் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம், தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகம், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகங்கள், தொழிலாளர் துணை ஆய்வாளர் அலுவலகங்கள், தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகங்கள், முத்திரை ஆய்வாளர் அலுவலகங்கள் உள்ளிட்ட 17 அலுவலகங்கள் செயல்பட உள்ளது. மேலும் இங்கே ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. அலுவலக வளாகம் கட்டிடம் தரைத்தளம், இரண்டு மாடிகள் உட்பட 3 தளங்களாக 21,630 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் திருநெல்வேலி மாவட்ட தொழிலாளர்கள் நலவாரியம் தொடர்பான பயன்களை பெறவும், கோரிக்கைகளை தெரிவிக்க வருகை தரவும், வணிகர்கள் எடை அளவுகளை ஒரே இடத்தில் மறுபரீசிலனை செய்து முத்திரையிட்டு கொள்ளவும் ஏதுவாக ஒரே இடத்தில் அமைந்துள்ளது. இவ்வலுவலகத்திற்கு வந்து செல்ல வசதியாக சாலை வசதி, பேருந்து வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் விரைந்து செய்திட நடவடிக்கை எடுக்கப்படும். என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மதுரை கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு.சரவணன், திருநெல்வேலி தொழிலாளர் இணை ஆணையர் திருமதி.ஹேமலதா, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், உதவி செயற்பொறியாளர்கள் திருமதி.ஹேமாவதி, திருமதி.சிவகாமி, உதவி பொறியாளர்கள் திருமதி.முருகம்மாள், திருமதி.ராஜலெட்சுமி, நாகர்கோவில் தொழிலாளர் துணை ஆணையர் திரு.சுடலை ராஜ், தொழிலாளர் உதவி ஆணையர்கள் (திருநெல்வேலி) திரு.ராமகிருஷ்ணன், (நாகர்கோவில்) திரு.ஞானசம்மந்தம் மற்றும் தொழிலாளர் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.